**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>**

**<u>OS.No.247 /2017</u>**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.விஸ்வநாதன், இளநிலை உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2023 ஆண்டு டிசம்பர் மாதம் 21-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 21.12.2023**

**பெயர் - மால் மருகன்**

**த/பெ - பழனி**

**சாட்சி - DW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12. 50 P.M**

**<u>குறுக்கு விசாரணை-</u>**

1. வழக்கு சம்மந்தமாக அனைத்து விவரங்களும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தொடுக்கிறார் என்றால் கோவில் அவருக்கு சொந்தம் என்றும் ஒழுங்கான முறையில் தேர்தல் நடைபெறவில்லை என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். அவர் ஆதிதிராவிடர் பொதுநல கிராம சங்கம் நிர்வாக செயல்பாடுகளில் பிரதிவாதிகள் தலையிட கூடாது என்றும் 1 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் மேற்படி சங்கத்தின் நிர்வாகத்தினை எதிர்த்து எந்த தேர்தலும் நடத்த கூடாது என்றும், அருள்மிகு ஶ்ரீநிவாச பெருமாள் கோவில் நிர்வாகத்திலும் பிரதிவாதிகள் தலையிடக்கூடாது என்றும் மற்றும் மேற்படி சங்கம் மற்றும் கோவில் சொத்துக்களில் பிரதிவாதிகள் தலையிடக்கூடாது என்றும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் இந்த வழக்கு எந்த தேதியில் எந்த வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

20.12.2017 அன்று வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் தேதி எனக்கு தெரியாது.

1 முதல் 17 பிரதிவாதிகள் சேர்ந்து 25.12.2017 அன்று தேர்தல் நடத்தியுள்ளோம் என்றால் மேற்படி தேர்தல் நடந்தது ஆனால் நான் வழக்கறிஞர் என்ற முறையில் என்பெயர் சேர்த்து கொள்ளப்பட்டது நான் அந்த இடத்தில் இல்லை ரமேஷ்சந்தர் மேற்படி தேர்தலை நடத்தினார். எனது சத்தியபிரமாண வாக்குமூலத்ததில் உள்ள சங்கதிகள் அனைத்தும் தெரியும் என்றால் சரிதான். மேற்படி தேர்தல் நடத்துவதற்கு முன்பு சங்கத்தின் தலைவர் யார் என்றால் செல்வம் ஆவார். நான் வழக்கிற்காக பொய்யுரைக்கிறேன் என்றும் அதற்கு முன் இருந்த சங்கத்தின் தலைவர் டோக்கியோ மணி என்றால் சரியல்ல. ஊர்மக்கள் அனைவரும் சேர்ந்து டோக்கியோ மணியை தலைவராக தேர்ந்தெடுத்து அவர்தான் சங்கத்தை நிர்வகித்து வந்தார் எனக்கு தெரியாது. இதற்கு முன் இருந்த தலைவர் செல்வம் உடல்நிலை சரியில்லாததால் பொறுப்பில் இருந்து விலகுவதாக கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் செயற்குழு கூட்டி தீர்மானத்தின் அடிப்படையில் டோக்கியோ மணி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது ( **மேற்படி கேள்விக்கு பிரதிவாதிகள் தரப்பில் வழக்குரையில் மேற்படி சங்கதி குறிப்பிடபடவில்லை என ஆட்சேபணைக்குட்பட்டு மேற்படி கேள்வி பதிவு செய்யப்படுகிறது)**

மேற்படி சங்கம் எந்த தேதியில் பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 06.09.1996 ல் மேற்படி சங்கம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சங்கத் துணை விதிகள் எப் 1 ன் படி பழைய கிணறு தெரு தற்போது ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் முதல் மற்றும் இரண்டாம் தெரு, ஸ்ரீநிவாச பெருமாள் கோவில் 3வது தெரு புதிய கிணறு தெரு ஆகிய நான்கு தெருக்களில் வசிக்கும் திருமணமான ஆண் ஆதிதிராவிட இனத்தை சேர்ந்தவர்கள் மேற்படி வாதி சங்கத்தின் உறுப்பினர் நுழைவு கட்டணம் ரூபாய் 5 செலுத்தி உறுப்பினர் ஆகலாம் என்றால் எனக்கு தெரியாது. மாதாந்திர சந்தா 75பைசா அல்லது வருடாந்திர சந்தா ரூபாய் 9 செலுத்தி மேற்படி சங்கத்தில் உறுப்பினர் ஆகலாம் என்றால் எனக்கு தெரியாது. சங்கத்தின் துணை விதிப்படி எப் 12 ன் படி 30 வயதிற்கு மேற்பட்ட சுமார் பத்து ஆண்டுகள் மேற்படி நான்கு தெருக்களில் வசிக்கும் திருமணமான ஆதிதிராவிட ஆண்கள் மட்டும் மேற்படி சங்கத்தின் நிர்வாகிகள் தேர்தலில் போட்டியிட தகுதியுடையவர்கள் என்றால் எனக்கு மேற்படி சங்கத்தின் உறுப்பினர் இல்லாததால் சங்கத்தின் விதிமுறைகள் எனக்கு தெரியாது. நான் தேர்தலிலும் கலந்து

கொள்ளவில்லை. பிரதிவாதிகள் 1 முதல் 17 வரையிலானவர்கள் தான் தேர்தலை நடத்தினார்கள் என்றும் அதில் நானும் ஒருவர் என்றும் கூறினால் சரிதான் விதி எம் 1ன் படி சங்க நிர்வாக குழுவின் ஒரு தலைவர் ஒரு துணை தலைவர் ஒருசெயலாளர் ஒரு இணை செயலாளர் ஒரு பொருளாளர் 16 செயற்குழு உறுப்பினர்கள் ஆக மொத்தம் 21 நபர்கள் கொண்டது என்றால் எனக்கு தெரியாது . சங்க விதிமுறைகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாதா என்றால் தெரியாது. 1 ம் பிரதிவாதி மேற்படி சங்கத்தில் 2005 முதல் 2006 வரை சட்ட ஆலோசகராக இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. பிறகு சங்கத்தில் இருந்து அவரை மாற்றி வேறு சட்ட ஆலோசகர் இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 1 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தேர்தலை நடத்துவதற்கு முன்பு இருந்த நிர்வாகத்தினரிடம் பொதுக்குழு கூட்டுவது குறித்தோ தேர்தல் நடத்துவது குறித்தோ அறிவிப்பு கொடுத்தோமா என்றால் எனக்கு தெரியாது.

**(மேலும் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது .)**

**விசாரணை முடியும் நேரம் : 1.35 P.M**